People's Watch
No.6, Vallabai Road, Chokkikulam, Madurai - 625 002.
Phone: 0452-2531874 & 2539520 Fax: 0452- 2531874
E.mail: info@pwtn.org Web: www.pwtn.org

**06.03.2010**

**மாண்புமிகு. தமிழக முதல்வர் அவர்கள்,**
தமிழ்நாடு அரசு,
தலைமைச் செயலகம்,
சென்னை 600 009.

மாண்புமிகு முதல்வர், அவர்களுக்கு
மக்கள் கண்காணிப்பகத்தின் இனிய வணக்கங்கள்.

மதுரையைத் தலைமையிடமாகக் கொண்டு மக்கள் கண்காணிப்பகம் அமைப்பு கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக மனித உரிமை செயல்பாட்டுத் தளத்தில் இயங்கி வருகிறது. கடந்த ஆண்டு முதல் சித்ரவதைத் தடுப்பிற்கான தேசியத் திட்டத்தில் இந்தியா முழுவதிலுமுள்ள 10 மாநிலங்களிலும் செயல்பட்டு வருகிறது.

எவ்வித அரசியல் கட்சி சார்புமின்றியும், தனி நபர் மீதான விருப்பு, வெறுப்புக்களைக் கடந்தும், மனித உரிமை அரங்கில் அரசைக் கண்காணித்து மனித உரிமைக் கலாச்சாரத்தை வளர்த்தெடுக்கும் விதமாக எங்களது பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

**21.2.10 முதல் 28.2.10 முடிய இவ்வாரத்தில் நடந்த மனித உரிமை மீறல்கள்**

| | | |
|---|---|---|
| 1. | என்கவுண்டர்/ காவல் மரணம் | 1 |
| 2. | சிறைக் கைதி மரணம் / வன்முறை | - |
| 3. | பெண்கள் மீதான வன்முறை | 42 |
| 4. | காவல் நிலையச் சித்திரவதை | 9 |
| 5. | வகுப்பறை வன்முறை | 3 |
| 6. | தலித்துகள் மீதான வன்முறை | 9 |
| 7. | அரசு அதிகாரிகள் / காவல் துறையினர் லஞ்சம் பெற்றது. | 6 |
| 8. | மருத்துவர்கள் அலட்சியம் | 1 |
| 9. | கொத்தடிமை | - |
| 10. | பெண் சிசு கொலை | - |
| 11. | குழந்தை திருமணம் | - |
| 12. | குழந்தை தொழிலாளர் மீட்பு/ வன்முறை | 7 |
| 13. | மீனவர்கள் மீது தாக்குதல் | 1 |
| 14. | கந்து வட்டிக் கொடுமை | - |
| 15. | கட்டப்பஞ்சாயத்து / சமூகப் புறக்கணிப்பு | 2 |
| 16. | ரேசன் அரிசி கடத்தல் | - |
| 17. | மணல் கொள்ளை | - |
| 18. | திருநங்கைகள் மீதான வன்முறை | - |
| 19. | பொதுவானவை | 4 |
| | மொத்தம் | 85 |

தாங்கள் இச்சம்பங்களில் உடனடியாக தலையிட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம்.

நம்பிக்கையுடன் மனித உரிமைப் பணியில்
(ஹென்றி டிபேன்)
நிர்வாக இயக்குநர்

நகல்கள்:
அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும்
அனைத்து மாவட்ட காவல்துறைக் கண்காணிப்பாளர்களுக்கும்
அனைத்து அரசியல் கட்சிகளுக்கும்

# தமிழகத்தில் மனித உரிமை மீறல்கள் - தொகுப்பு
## 21. 02.2010 முதல் 28.02.2010 முடிய

| வ. எண் | செய்தி கிடைத்த நாள் | மாவட்டம் / பெயர் விபரம் மற்றும் சம்பவ விபரம் | பிரிவு | தகவல் பெற்றது. |
|---|---|---|---|---|
| 540. | 21.2.10 | **திருவண்ணாமலை மாவட்டம்:** வந்தவாசி அடுத்த பிருதூர் ஏரிக்கரையில் வசித்து வருபவர் மாரியப்பன் மகள் ரதி(13). அதே ஊரைச் சேர்ந்த பன்னீர் ரதியை பாலியல் பலாத்காரம். | குழந்தைகள் மீதான பாலியல் வன்முறை | S.பாஸ்கர் தினகரன் (19.1.10) |
| 541. | 21.2.10 | **திருவண்ணாமலை மாவட்டம்:** போளூர் அருகே போத்தரை கிராமத்தைச் சேர்ந்த சேகர்(28) மனைவி இந்திரா(25). சேகரின் தந்தை முனிரத்தினம் மருமகள் இந்திரா பெயருக்கு சொத்தை எழுதி வைத்தார். ஆத்திரமடைந்த சேகர் தனது பெயருக்கு சொத்தை மாற்றித்தராவிட்டால் சுட்டுக் கொன்றுவிடுவதாக மிரட்டியதாக இந்திரா புகார். | பெண்கள் மீதான வன்முறை | S.பாஸ்கர் தினகரன் (20.1.10) |
| 542. | 21.2.10 | **திருவண்ணாமலை மாவட்டம்:** வந்தவாசி அடுத்த கண்டியநல்லூர் கிராமத்தை சேர்ந்த மூர்த்தி(23) மனைவி பாக்யலட்சுமி(20). கணவன் மனைவி குடும்ப தகராறில் மனமுடைந்த பாக்யலட்சுமி தீக்குளித்து தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை | S.பாஸ்கர் தினகரன் (22.1.10) |
| 543. | 21.2.10 | **நாகை மாவட்டம்:** மயிலாடுதுறை அடுத்த மல்லியம் மஞ்சள் வாய்க்காலை சேர்ந்த ராஜேந்திரன் மனைவி மல்லிகா(35). வயலுக்கு சென்ற மல்லிகாவை மாதவன்(22) பாலிலுக்கு உள்ளாக்க முயற்சி. பாலியலில் ஈடுபட மறுத்ததால் ஆத்திரம் அடைந்து மல்லிகாவை எரித்துக் கொன்றதாகக் மாதவன் கைது. | பெண்கள் மீதான வன்முறை | திருமுகம் தினகரன் (1.2.10) |
| 544. | 21.2.10 | **நாகை மாவட்டம்:** மன்னார்குடி அருகே பேரையூர் பெரியாபுரத்தை சேர்ந்த சங்கர்(31) மனைவி செல்வி. கணவன் மற்றும் மாமியார் கூடுதல் வரதட்சணை கேட்டு துன்புறுத்தியதால் செல்வி தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை | திருமுகம் தினகரன் (3.2.10) |
| 545. | 21.2.10 | **திருவண்ணாமலை மாவட்டம்:** வேட்டவலம் அருகே கார்ணாம்பூண்டி கிராமத்தை சேர்ந்த பன்னீர்செல்வம் மனைவி மகாலட்சுமி(20). கணவன் மனைவி தகராறில் ஆத்திரமடைந்த பன்னீர்செல்வம் மனைவி மீது மண்ணெண்ணெய் ஊற்றி தீ வைத்ததாக புகார். | பெண்கள் மீதான வன்முறை | S.பாஸ்கர் தினகரன் (4.2.10) |
| 546. | 21.2.10 | **திருவண்ணாமலை மாவட்டம்:** திருவண்ணாமலை அடுத்த மங்கலம் அருகே உள்ள மேல்குன்னுமுறிஞ்சி கிராமத்தை சேர்ந்த வெங்டேஷன் மனைவி மலர்(25) | பெண்கள் மீதான வன்முறை | S.பாஸ்கர் தினகரன் (4.2.10) |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | இவருக்கும் ஏழுமலைக்கும் ஏற்பட்ட தகராறில் ஏழுமலை மலரைத் தாக்கியதாக புகார். | | |
| 547. | 21.2.10 | **நாகை மாவட்டம்:** தரங்கம்பாடி அடுத்த மேட்டுக் கட்டளையை சேர்ந்த நல்லமுத்து(35) மனைவி தமயந்தி(28) கணவருடன் ஏற்பட்ட தகராறில் தீக்குளித்து தமயந்தி தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை | திருமுகம் தினகரன் (4 .2.10) |
| 548. | 21.2.10 | **திருவண்ணாமலை மாவட்டம்:** போளூர் அருகே உள்ள செங்குணம் கிராமத்தை சேர்ந்த குப்புராவ்(32) மனைவி திலகவதி(20). கூடுதல் வரதட்சணை கேட்டு கணவர் மற்றும் குடும்பத்தார் துன்புறுத்தியதாக திலகவதி புகார். | பெண்கள் மீதான வன்முறை | S.பாஸ்கர் தினகரன் (5.2.10) |
| 549. | 21.2.10 | **திருவள்ளூர் மாவட்டம்:** பள்ளிப்பட்டு அடுத்த கொளத்தூர் கிராமத்தைச் சேர்ந்த முருகன் மனைவி ரேகா(20). கூடுதல் வரதட்சணை கேட்டு கணவர் மற்றும் குடும்பத்தார் துன்புறுத்தியதால் ரேகா தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை | S.பாஸ்கர் தினகரன் (7.2.10) |
| 550. | 21.2.10 | **திருவண்ணாமலை மாவட்டம்:** ஆரணி களத்துமேட்டுத் தெருவைச் சேர்ந்த கூலித்தொழிலாளி பலராமன் மகள் தேவி(19) உடலில் பல காயங்களுடன் கிணற்றில் பிணமாக கிடந்ததாக புகார். | பெண்கள் மீதான வன்முறை | S.பாஸ்கர் தினகரன் (7.2.10) |
| 551. | 21.2.10 | **நாகை மாவட்டம்:** சின்னங்குடியைச் சேர்ந்த கருப்புராமன் வீட்டில் நகை திருட்டு போனது. இது தொடர்பாக மீனவர் பொன்னுச்சாமி(45) சரத்குமார் (28). இருவருக்கும் ஊர் பஞ்சாயத்தார் ரூ.1 லட்சம் அபராதம் விதித்தனர். அபராதத்தை செலுத்ததால் பொன்னுச்சாமியை ஊரைவிட்டு ஒதுக்கி வைத்ததாக மீனவர் பொன்னுச்சாமி புகார். | கட்டப்பஞ்சாயத்து மற்றும் சமூகப் புறக்கணிப்பு | திருமுகம் தினகரன் (9.2.10) |
| 552. | 21.2.10 | **புதுச்சேரி மாநிலம்:** காரைக்கால் தர்மபுரத்தை சேர்ந்த ரஜினி மனைவி உஷா(30). கணவன் மனைவி குடும்ப தகராறில் ஆத்திரமடைந்த ரஜினி கம்பால் தாக்கியதில் உஷா இறந்ததாக புகார். | பெண்கள் மீதான வன்முறை | திருமுகம் தினகரன் (9.2.10) |
| 553. | 21.2.10 | **நாகை மாவட்டம்:** நாகை மீனவர்கள் 10பேரை நடுக்கடலில் இலங்கை கடற்படையினர் வலைகளை அறுத்து டீசலை பிடித்து மீன்கள் மீது கொட்டி, தாக்கியதாக மீனவர்கள் புகார். | மீனவர்கள் மீதான வன்முறை | திருமுகம் தினகரன் (10.2.10) |
| 554. | 21.2.10 | **நாகை மாவட்டம்:** தரங்கம்பாடி அருகே திருக்களாச்சேரியில் தனியார் பள்ளியில் பிளஸ்2 மாணவர் பைசல். ஆசிரியை கீதாவை கேலி செய்ததாக பள்ளியில் இருந்து நீக்கப்பட்டார் பைசல். நீக்கிய மாணவனை தேர்வு எழுத தலைமையாசிரியர் அனுமதித்ததால் ஏற்பட்ட மோதலில் | பெண்கள் மீதான வன்முறை | திருமுகம் தினகரன் (10.2.10) |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தலைமையாசிரியர் உட்பட 4 பேர் தன்னை தாக்கியதாக கீதா புகார். | | |
| 555. | 21.2.10 | **நாகை மாவட்டம்:** மணல்மேடு அருகே சேட்டூர் காலனி தெருவை சேர்ந்த ராதாகிருஷ்ணன் மனைவி சத்யவாணி(32) கணவன் மனைவி குடும்ப தகறாறில் சத்யவாணி தீக்குளித்து தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை | திருமுகம் தினகரன் (10.2.10) |
| 556. | 21.2.10 | **திருவண்ணாமலை மாவட்டம்:** கலசப்பாக்கம் கிராமத்தை சேர்ந்த சக்கரை மகள் சுதா(8). அதே ஊரைச் சேர்ந்த ரமேஷ்(29) சிறுமி சுதாவை பாலியல் பலாத்காரம் செய்ததாக பெற்றோர் புகார். | குழந்தைகள் மீதான பாலியல் வன்முறை | S.பாஸ்கர் தினகரன் (15.2.10) |
| 557. | 21.2.10 | **திருவண்ணாமலை மாவட்டம்:** செய்யாறு அடுத்த சிறுவஞ்சிப்பட்டு காலனியைச் சேர்ந்த குப்பன் மனைவி கீர்த்தனா(20). கூடுதல் வரதட்சணை கேட்டு குப்பன் மற்றும் குடும்பத்தார் துன்புறுத்தியதால் கீர்த்தனா தீக்குளித்துத் தற்கொலை. | குழந்தைகள் மீதான பாலியல் வன்முறை | S.பாஸ்கர் தினகரன் (15.2.10) |
| 558. | 21.2.10 | **திருவாரூர் மாவட்டம்:** குடவாசல் அருகே அகர ஓகை பகுதியைச் சேர்ந்த தனிக்காசலம் மனைவி வனஜா(32). கணவன் மனைவி தகராறில் மனமுடைந்த வனஜா தீக்குளித்துத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை | திருமுகம் தினகரன் (18.2.10) |
| 559. | 21.2.10 | **திருச்சி மாவட்டம்:** திருவெறும்பூரில் உள்ள பர்மா காலனியைச் சேர்ந்த வெங்கடேஷ். கடலூரைச் சேர்ந்த அருள்மணி மகன் கண்ணதாசனை கடத்தி வந்து திருட்டு தொழிலில் ஈடுபடுத்தி கண்ணதாசனை கொடுமைப்படுத்தியதாக வெங்கடேஷ் கைது. | குழந்தைகள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 560. | 21.2.10 | **மதுரை மாவட்டம்:** திருமங்கலத்தில் உள்ள தனியார் பள்ளியில் 7 ம் வகுப்பு படிக்கும் அஜீத்குமார்(12) திருமங்கலம் பஸ் நிலையத்தில் வைத்து மர்ம கும்பல் கடத்தியதாக புகார். | குழந்தைகள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 561. | 21.2.10 | **திருப்பூர் மாவட்டம்:** உடுமலையை அடுத்த அய்யம்பாளையம்புதூர் பகுதியைச் சேர்ந்த சிவக்குமார்(28) கீதா(21). இருவரும் காதலித்தனர். சிவக்குமார் திருமணம் செய்து கொள்வதாக ஆசை வார்த்தை கூறி ஏமாற்றியதாக சிவக்குமர் மீது கீதா புகார். | பெண்கள் மீதான வன்முறை | மாலைமலர் |
| 562. | 21.2.10 | **மதுரை மாவட்டம்:** மேலூர் அருகே உள்ள உறங்கான்பட்டியைச் சேர்ந்த ராஜபாண்டி மனைவி செல்வமீனாள்(24). கணவன் மனைவி குடும்ப தகராறில் செல்வமீனாள் தனது இரண்டு குழந்தைகளுடன் மாயம். | பெண்கள் மீதான வன்முறை | மாலைமலர் |
| 563. | 21.2.10 | **மதுரை மாவட்டம்:** சமயநல்லூர் அருகே சிறுவயல் பகுதியைச் சேர்ந்த ராஜு மனைவி நாகரத்தினம்(45). அதே பகுதியைச் சேர்ந்த | பெண்கள் மீதான வன்முறை | தமிழ்முரசு |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | மலைச்சாமி(60) கண்ணன்(26) இருவரும் குடிபோதையில் தாக்கியதாக நாகரத்தினம் புகார். | | |
| 564. | 21.2.10 | **இரமநாதபுரம் மாவட்டம்:** உச்சிப்புளியில் ஆரம்ப சுகாதார நிலையத்தில் கர்ப்பிணி பெண்களுக்கு வழங்கப்படும் ரூ.6 ஆயிரம் உதவித்தொகை வழங்க அங்குள்ள நர்ஸ் லெட்சுமி லஞ்சம் கேட்பதாக பொதுமக்கள் புகார். லஞ்ச ஒழிப்புதுறையின்அதிகாரிகள் சோதனை. | லஞ்சம் | தமிழ்முரசு |
| 565. | 21.2.10 | **திருநெல்வேலி மாவட்டம்:** சங்கரன் கோவில் அருகே உள்ள தேவர்குளத்தை சேர்ந்த கனகராஜ்(44) மனைவி சோலையம்மாள்(39). கணவன் மனைவி தகராறில் மனைவி மீது சந்தேகப்பட்டு வெட்டியதாக கனகராஜ் கைது. | பெண்கள் மீதான வன்முறை | தமிழ்முரசு |
| 566. | 22.2.10 | **சிவகங்கை மாவட்டம்:** மானாமதுரையைச் சேர்ந்த பொன்னுச்சாமி(36) மனைவி சுஜாதா. கணவன் மனைவி குடும்ப தகராறில் பொன்னுச்சாமி தினமும் குடித்துவிட்டு வந்து அடித்து துன்புறுத்தியதாகவும், கொலைமிரட்டல் விடுத்ததாகவும் புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 567. | 22.2.10 | **மதுரை மாவட்டம்:** உசிலம்பட்டி அருகே உள்ள நாட்டார்மங்கலத்தைச் சேர்ந்த ஜெயபிரகாஷ்(34) மனைவி சுகன்யா(18). கணவர் மற்றும் குடும்பத்தார் கூடுதல் வரதட்சணை கேட்டு துன்புறுத்துவதாக புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 568. | 22.2.10 | **விருதுநகர் மாவட்டம்:** சிவகாசி முருகன் காலணியைச் சேர்ந்த தங்கராஜ்(36) மனைவி அகிலா(28). குடும்ப தகராறில் அகிலா தற்கொலை. போலீசுக்கு தெரிவிக்காமல் அகிலாவை எரிக்க முயன்றதாக தங்கராஜ் மீது புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 569. | 23.2.10 | **இராமநாதபுரம் மாவட்டம்:** ராதாபுரம் தாலுகா, காரியாகுளம் கிராமத்தில் தலித் சமூகத்தை சேர்ந்த செல்லையா மரணம். செல்லையாவுக்கான சடங்கு செய்வதில் கிறிஸ்துவ தேவாலயத்தில் உள்ள பாதிரியாரால் சாதிய பாகுபாடு, | தலித்துகள் மீதான வன்முறை | தினகரன் |
| 570. | 23.2.10 | **திண்டுக்கல் மாவட்டம்:** நத்தம் சிறுகுடி அருகேயுள்ள பூசாரிபட்டியைச் சேர்ந்த முகமது சாலிம் மகள் அனிஷாபானு(19). விஷம் குடித்து தற்கொலை. தனது மகள் சாவில் மர்மம் இருப்பதாக முகமது சாலிம் புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினமலர் |
| 571. | 23.2.10 | **மதுரை மாவட்டம்:** திருமங்கலத்தில் பி.கே.என். ஆரம்பப்பள்ளியின் ஆசிரியர் கணேஷ்மாறன்(32). ஐந்தாம் வகுப்பு பயிலும் மாணவிகளிடம் பாலியல் சில்மிஷம் செய்ததாக பெற்றோர் புகார். | வகுப்பறை வன்முறை | தினமலர் |

| | | | | |
|---|---|---|---|---|
| 572. | 23.2.10 | **ஈரோடு மாவட்டம்:** அந்தியூர் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் மாணவிகளிடம் பாலியல் தொந்தரவில் ஈடுபட்டதாக ஆசிரியர் சுப்பிரமணியம் ஜான்டெரிக், இருவர் மீதும் புகார். | வகுப்பறை வன்முறை | தினமலர் |
| 573. | 23.2.10 | **கடலூர் மாவட்டம்:** பாதிரிக்குப்பம் சுந்தரமூர்த்தி நகரைச் சேர்ந்த ரெஜிஸ்(48) மனைவி ரூபலா சகாய ராணி(39). இருவரும் ஆசிரியர்களாக பணியாற்றி வருகின்றனர். மின் கம்பத்திலிருந்து கம்பி மூலம் இவர்கள் வீட்டு கேட்டிற்கு மின் இணைப்பு கொடுத்து ஆசிரியர் குடும்பத்தை கொல்ல முயன்றதாக ரெஜிஸ் புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினமலர் |
| 574. | 23.2.10 | **திண்டுக்கல் மாவட்டம்:** வேடசந்தூர் வட்டம் கோவிலூர் அருகே உள்ள ஆர்.புதுக்கோட்டை அடுத்த எல்லப்பட்டி புதூர் கிராமத்தை சேர்ந்த பொ.பெருமாள் மனைவி சவடம்மாள். ஊரில் சாலை அமைப்பதில் ஏற்பட்ட பிரச்சனை காரணமாக ஊர் பஞ்சாயத்தார் பெருமாள் குடும்பத்தை ஊரை விட்டு ஒதுக்கி வைத்துள்ளனர். இப்பிரச்சினை குறித்து புகார் கொடுத்தும் நடவடிக்கை எடுக்கவில்லை என பெருமாள் குடும்பத்தினர் புகார். | கட்டப்பஞ்சாயத்து/ சமூகப் புறக்கணிப்பு/ காவல்நிலைய வன்முறை | தினமணி |
| 575. | 23.2.10 | **விருதுநகர் மாவட்டம்:** ராஜபாளையம் அருகே கணபதி சுந்தரநாச்சியார்புரத்தை சேர்ந்த ராயல்சாமி மனைவி சுந்தரம்மாள்(45) இவரது மகள் லிங்கம்மாளின் கணவர் ரமேஷ். மாமியார் சுந்தரம்மாளை பாலியல் பலாத்காரம் செய்து தாக்கியதில் சுந்தரம்மாள் மரணம். | பெண்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 576. | 23.2.10 | **மதுரை மாவட்டம்:** திருமங்கலம் அருகே கல்லுபட்டியைச் சேர்ந்த முத்துராஜ் மகன் ரகு குமார்(14). இவர் கல்லுப்பட்டியில் விடுதியில் தங்கி 9–ம் வகுப்பு படித்து வந்தார். ரகு குமாரை டில்லியைச் சேர்ந்த நீதி, செந்தில், போதுமணி கடத்தியதாக புகார். | குழந்தைகள் மீதான வன்முறை | தமிழ்முரசு |
| 577. | 23.2.10 | **கிருஷ்ணகிரி மாவட்டம்:** தேன்கனிக்கோட்டை கல்கேரி கிராமத்தில் உள்ள கரகம்மன் கோயில்களில் தலித் மக்கள் நுழையத் தடை. தலித் மக்களின் விளைநிலங்களுக்கான பாதைகளும் ஓராண்டு காலமாக மூடப்பட்டுள்ளதாக புகார். | தலித்துகள் மீதான வன்முறை | தீக்கதிர் |
| 578. | 23.2.10 | **விருதுநகர் மாவட்டம்:** காரியாபட்டி, ஆவியூர் கிராமத்தில் 100க்கும் மேற்பட்ட தலித் அருந்ததியர் குடும்பங்கள் வசித்து வருவதாகவும் இங்கு பிணத்தை தூக்கிக்கொண்டு முட்புதர்களின் வழியே செல்லவேண்டும் என்றும் மயான கொட்டகை வசதி இல்லை எனவும் பொதுமக்கள் புகார். | தலித்துகள் மீதான வன்முறை | தீக்கதிர் |



மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| 579. | 24.2.10 | **திருச்சி மாவட்டம்:** துறையூர் தாலுகா அம்பாள்சமுத்திரத்தைச் சேர்ந்த மகேஸ்வரி(24). மருத்துவமனையில் தவறான சிகிச்சை அளிக்கப்பட்டதால் மகேஸ்வரி மரணம். | பெண்கள் மீதான வன்முறை | பிரபாகரன் |
| 580. | 24.2.10 | **மதுரை மாவட்டம்:** ஏழுமலை அரசு உயர்நிலைப்பள்ளியில் 800க்கும் மேற்பட்ட மாணவிகள் படித்து வருகின்றனர். இங்கு பள்ளியைச் சுற்றி காம்பவுண்ட் சுவர் இல்லாததால் இரவு நேரங்களில் சமூக விரோதச் செயல்கள் நடைபெறுவதாக பொதுமக்கள் புகார். | வகுப்பறை வன்முறை | தினமலர் |
| 581. | 24.2.10 | **புதுக்கோட்டை மாவட்டம்:** புதுக்கோட்டை தனிப்படை (குற்றப்பிரிவு) போலீஸ் எஸ்.ஐ., அன்பழகன். திருநெல்வேலிக்கு மாற்றல் ஆகி போலீஸ் வாகனத்தில் வந்தபோது லஞ்ச ஒழிப்பு போலீசாரின் சோதனையில் லஞ்சமாக புதுப்பட சிடிக்கள் மற்றும் பணம் அன்பழகனிடம் இருந்து பறிமுதல். | லஞ்சம் காவல்நிலைய வன்முறை | தினமலர் |
| 582. | 24.2.10 | **சென்னை மாவட்டம்:** சென்னை புழல் அடுத்த மாத்தூரை சேர்ந்த கிருஷ்ணமூர்த்தி மனைவி பானுரேகா(45). இவர் கட்டட வரைபடத்துக்கு விண்ணப்பம் செய்தார். பிளான் அப்ருவலுக்கு எழுத்தரின் உதவியாளர் கார்த்திகேயன்(52) ரூ.4.000 லஞ்சம் கேட்டதாக பானுரேகா புகார். | லஞ்சம் | தினமலர் |
| 583. | 24.2.10 | **தஞ்சாவூர் மாவட்டம்:** பட்டுக்கோட்டை அடுத்த செம்பாளூர் ஊராட்சி எட்டுபுலிக்காடு கிராமத்தில் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் மதியம் சத்துணவு சாப்பிட்ட மாணவ, மாணவியர் மயக்கம். மாணவனின் தட்டில் பல்லி கிடந்ததாக புகார். | சுகாதாரக்கேடு | தினமலர் |
| 584. | 24.2.10 | **சென்னை மாவட்டம்:** பட்டினப்பாக்கம் சீனிவாசபுரத்தைச் சேர்ந்த உமா. கே.கே.நகர் 1 வது தெருவைச் சேர்ந்த விவேகானந்தன்(28) செல்போனில் பேசி செக்ஸ் தொல்லை கொடுத்தாக உமா புகார். விவேகானந்தன் கைது. | பெண்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 585. | 25.2.10 | **புதுக்கோட்டை மாவட்டம்:** புதுக்கோட்டை அடுத்த கே.புதூர்பட்டி அடுத்த கல்லூர் கிராமத்தில், முனீஸ்வரர் உடனுறை பெரியநாயகி அம்மன் கோவில் திருவிழா. ஜல்லிக்கட்டின் நிகழ்ச்சியின் போது கூட்டத்தை கலைக்க போலீசார் தடியடி பலர் படுகாயம். | காவல் நிலைய வன்முறை | தினமலர் |
| 586. | 25.2.10 | **தஞ்சாவூர் மாவட்டம்:** பொறையார் அடுத்த காட்டுச்சேரி சமத்துவபுரத்தைச் சேர்ந்த சத்யசீலன் மனைவி கஸ்தூரி(29). | பெண்கள் மீதான வன்முறை | தினமலர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | இவருக்கும் சிவக்குமார்(31)–க்கும் கள்ளத்தொடர்பு. இருவருக்குள் ஏற்பட்ட தகராறில் சிவக்குமார் கஸ்தூரி மீது மண்ணெண்ணெய் ஊற்றி தீ வைத்ததாக கைது. | | |
| 587. | 25.2.10 | **திண்டுக்கல் மாவட்டம்:** தாண்டிக்குடி அருகே உள்ள கொட்டகொம்பைச் சேர்ந்த நாகராஜ்(42). உடல்நிலை மோசமடைந்ததால் சிகிச்சைக்கு ஆம்புலன்ஸில் பண்ணைக்காடு அரசு மருத்துவமனைக்கு வந்தார். உடன் சிகிச்சை அளிக்காமல் ஒரு மணி நேரம் நுழைவு வாயிலில் காத்திருப்பு. | அரசு மருத்துவமனை டாக்டர்கள் அலட்சிம் | தினமலர் |
| 588. | 25.2.10 | **இராமநாதபுரம் மாவட்டம்:** ஆலங்குடியைச் சேர்ந்த தலித் பெண் பாகம்பரியாள். காவலர்களால் அழைத்து விசாரணைக்கு செல்லப்பட்டார். காவல் நிலையத்தில் வைத்து தலைமைக் காவலர் முத்தையா பாகம்பரியாளை மானபங்கம் செய்ததாக புகார். | தலித்துகள் மீதான வன்முறை காவல் நிலைய வன்முறை | தீக்கதிர் |
| 589. | 25.2.10 | **திண்டுக்கல் மாவட்டம்:** எரியோடு பேரூராட்சியில், தலித் மக்கள் வசிக்கும் பகுதியில் அடிப்படை வசதிகள் மற்றும் வளர்ச்சித் திட்டங்களிலிருந்து தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டு வருகின்றனர். மயானம், சாலை, சாக்கடை, மின்சார வசதி இல்லாமல் தலித் மக்கள் அவதி. | தலித்துகள் மீதான வன்முறை | தீக்கதிர் |
| 590. | 25.2.10 | **மதுரை மாவட்டம்:** மேலூர் அரசு கலைக்கல்லூரி விடுதியில் 100 மாணவர்கள் தங்கி உள்ளனர். விடுதியில் தங்களுக்கு குறித்த நேரத்தில் உணவு வழங்குவதில்லை என மாணவர்கள் போராட்டம். | மாணவர்கள் மீதான வன்முறை | தீக்கதிர் |
| 591. | 25.2.10 | **மதுரை மாவட்டம்:** சோழவந்தானில் ஒண்டிவீரன் போஸ்டா ஒட்டப்பட்டிருந்தது. இந்த போஸ்டரை கிழித்து பஸ் கண்ணாடி உடைத்ததாக அவனியாபுரத்தை சேர்ந்த செல்வத்தை காவலர்கள் கைது செய்தனர். கைது செய்தவரை விடுவிக்க கோரி பொதுமக்கள் சாலை மறியல். போலீஸ் தடியடி. | காவல் நிலைய வன்முறை | தமிழ்சுடர் |
| 592. | 25.2.10 | **திருச்சி மாவட்டம்:** திருச்சியை சேர்ந்த ஞானசேகர் அருள்ராஜ்(55) மனைவி பிரேமாவதி பொன்ராணி. ஞானசேகர் கூடுதல் வரதட்சணைக் கேட்டு துன்புறுத்தியதால் தனது தங்கை பிரேமாவதி இறந்ததாக சுசிலா ஜான்சிராணி (55) புகார். | பெண்கள் மீதான வன்முறை | தமிழ்சுடர் |
| 593. | 25.2.10 | **மதுரை மாவட்டம்:** மீனாட்சி அம்மன் கோவில் தெருவைச் சேர்ந்த விஜி–சுரேகா தம்பதிகளின் மகள் ரோகிணி. ரோகிணிக்கும் சக்திக்கும் பழக்கம். சக்தி பெண் கேட்டார் ரோகிணி வீட்டில் பெண் தர மறுப்பு. சக்தி | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |



மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | கொலை மிரட்டல் விடுத்ததாக புகார். | | |
| 594. | 25.2.10 | **தஞ்சை மாவட்டம்:** கும்பகோணம் அருகே உள்ள அய்யாவாடி தெருவைச் சேர்ந்த தமிழ்ச்செல்வன் (29). நாச்சியார் கோவில் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார். தலைமை மருத்துவர் எஸ்.மகாலிங்கம்(41) சிகிச்சை செய்ய ரூ1,000 லஞ்சம் கேட்டதாக தமிழ்ச்செல்வன் புகார். | லஞ்சம் | தினமணி |
| 595. | 25.2.10 | **சென்னை மாவட்டம்:** அம்பத்துர் அருகே ஒரகடம் எம்ஜிஆர் தெருவை சேர்ந்த துரைசாமி மகள் அனிதா(20) பெற்றோர் திருமணத்துக்கு ஏற்பாடு செய்ததால் அனிதா தூக்குபோட்டு தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை | தமிழ்முரசு |
| 596. | 25.2.10 | **விருதுநகர் மாவட்டம்:** ராஜபாளையம் அருகே நரிக்குறவர் இனத்தைச் சேர்ந்த பாக்கியராஜ் மனைவி மாலா. இருவரையும் திருமங்கலம் காவலர்கள் சித்திரவதை செய்ததாக மாலா புகார். | காவல் நிலைய வன்முறை | முனியராஜ் |
| 597. | 25.2.10 | **திருவண்ணாமலை மாவட்டம்:** போலூர் அருகே பதியவாசி கிராமத்தை சேர்ந்த மாணிக்கம் மனைவி லெட்சுமி. கணவன் மனைவி இருவரையும் ஆதிக்க சாதியை சேர்ந்தவர்கள் அடித்து சித்திரவதை. | தலித்துகள் மீதான வன்முறை | பாஸ்கரன் |
| 598. | 26.2.10 | **மதுரை மாவட்டம்:** புதூரைச் சேர்ந்த ஆறுமுகம் மகள் ஆராயி(16). அதே பகுதியைச் சேர்ந்த செல்வம்(27) மானபங்கப்படுத்த முயன்றதாக ஆராயி புகார். | பெண்கள் மீதான பாலியல் வன்முறை | தினகரன் |
| 599. | 26.2.10 | **இராமநாதபுரம் மாவட்டம்:** மதுரை புதுரைச் சேர்ந்த சுலைகராணி தனது மகளுடன் வசித்து வந்தார். மகன் இஸ்மாயில்(32) தன்னுடன் ஊருக்கு வரும்படி தாயை அழைத்தார். தாய் வர மறுக்கவே இஸ்மாயில் கொலை மிரட்டல் விடுத்ததாக சுலைகராணி புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 600. | 26.2.10 | **மதுரை மாவட்டம்:** மேலூர் அருகே தேனக்குடிபட்டியைச் சேர்ந்த நாகராஜ் மனைவி பஞ்சு(35). அதே பகுதியைச் சேர்ந்த பொன்னழகு. இருவருக்கும் இடையில் நடந்த நிலத்தகராறு தகராறில் பொன்னழகு தாக்கியதாக பஞ்சு புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 601. | 26.2.10 | **புதுச்சேரி மாநிலம்:** புதுச்சேரி வில்லியனூர் கொம்யூன் பஞ்சாயத்தில் குப்பை வாருவதற்கான டெண்டரை குப்தன் என்பவர் எடுத்திருந்தார். தொகைக்கு அனுமதியளிக்க ஆணையராக இருந்த அனிக்சன் ரூ. 5,000 லஞ்சம் கேட்டதாக குப்தன் புகார். | லஞ்சம் | தினகரன் |
| 602. | 26.2.10 | **கோவை மாவட்டம்:** ஆந்திர மாநிலம் ஐதராபாத்தைச் சேர்ந்த ராஜலட்சுமி(26). ஜார்ஜ் | பெண்கள் மீதான வன்முறை | தினமலர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | இருவரும் நண்பராக பழகியதாகவும் ஜார்ஜ் திருமணத்திற்கு வற்புறுத்தினார் என்றும் திருமணத்து சம்மதிக்காத ராஜலட்சுமியை இன்டர்நெட்டில் விபாசார பெண்ணாக சித்தரித்து பரவவிட்டுள்ளார் என ஜார்ஜ் மீது ராஜலட்சுமி புகார். | | |
| 603. | 26.2.10 | **மதுரை மாவட்டம்:** நாகமலை புதுக்கோட்டை அருகே உள்ள ஆலம்பட்டியைச் சேர்ந்த மண்டைப்புலியன் மனைவி வீராயி. வீராயி உயிருடன் இருக்கும்போதே இறந்துவிட்டதாக கூறி ரேசன்பொருட்கள் தரமறுத்ததாக வீராயி புகார். | பெண்கள் மீதான வன்முறை | தீக்கதிர் |
| 604. | 26.2.10 | **வேலூர் மாவட்டம்:** வேலூர் அருகே குரும்பர் இனத்தைச் சேர்ந்த பழங்குடி மக்கள் சாதிச்சான்று வழங்கக்கோரி போராட்டம் நடத்தியும் தமிழக அரசு வழங்காததால் குழந்தைகளின் மேற்படிப்பு பாதிப்பதாக மக்கள் துணைக் கலெக்டர் அலுவலகத்தை முற்றுகை. | தலித்துகள் மீதாக வன்முறை | தீக்கதிர் |
| 605. | 26.2.10 | **சிவகாசி மாவட்டம்:** சிவகாசி அருகே பெத்துலுபட்டியைச் சேர்ந்த சீனிவாசன் மகன் முருகன். ரத்தினம் பயர் ஒர்க்ஸ் பட்டாசு ஆலையில் மருந்து கலைவை செலுத்தும்பணியின் போது உராய்வு காரணமாக வெடிவிபத்து ஏற்பட்டதில் முருகன் பலத்த காயம். | பட்டாசு விபத்து | தினமணி |
| 606. | 27.2.10 | **மதுரை மாவட்டம்:** மீனாம்பாள்புரத்தை சேர்ந்த கண்ணன்(42) மனைவி அனுராதா(32). தனது மனைவி அனுராதாவை காணவில்லை என கண்ணன் புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 607. | 27.2.10 | **சென்னை மாவட்டம்:** நெய்வேலி நிலக்கரி கழகத்தின் சென்னை அலுவலகத்தில் ஜெனரல் மானேஜராக இருப்பவர் கிருபானந்தம்(58). நெய்வேலி ஹவுஸ் கட்டிடத்தில் சேர்மன் தங்குவதற்கான அறை புதுப்பிக்கப்பட்டது. இதை புதுப்பித்த காண்டிராக்டருக்கு பில் தொகையை அனுமதிப்பதற்கு மானேஜர் கிருபானந்தம் ரூ.50 ஆயிரம் லஞ்சம் கேட்டதாக புகார். | லஞ்சம் | தினத்தந்தி |
| 608. | 27.2.10 | **மதுரை மாவட்டம்:** மேலூர் அருகே அம்பலகாரன்பட்டியில் வல்லடிகாரர் கோவில் திருவிழாவில் இரு தரப்பினருக்கிடையில் நடந்த மோதலில் ஜெயபிரகாஷ்(19) முத்து மகன் கார்த்திக்(20) இருவரும் கொலை செய்யப்பட்டனர். | கோஷ்டி மோதல் | தினத்தந்தி |
| 609. | 27.2.10 | **மதுரை மாவட்டம்:** மதுரை பாத்திமா கல்லூரி அருகில் அன்னை தெரசா தெருவைச் சேர்ந்த தெய்வேந்திரன் மகள் சுந்தரி(21). பஸ் நிலையத்தில் நினறிருந்த | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சுந்தரியை சில மர்ம நபர்கள் காரில் கடத்திச் சென்றதாக தெய்வேந்திரன் புகார். | | |
| 610. | 27.2.10 | **வேலூர் மாவட்டம்:** திருப்பத்தூர் பகுதியில் வசித்து வரும் குறுமன்ஸ் பழங்குடியின மக்களுக்கு சாதிச்சான்றிதழ் வழங்க மாவட்ட விழிக்கண் குழு பரிந்துரை செய்தும் சார் ஆட்சியர் நந்தகுமார் மறுத்து வருவதாக புகார். | தலித்துகள் மீதான வன்முறை | தீக்கதிர் |
| 611. | **28.2.10** | **திண்டுக்கல் மாவட்டம்: திண்டுக்கல் கொடைரோடு அருகில் உள்ள மெட்டூரைச் சேர்ந்த போஸ்(30). போஸை விசாரணைக்காக அழைத்து சென்று காவலர்கள் அடித்து கொன்றதாக உறவினர்கள் புகார்.** | **காவல் நிலைய வன்முறை** | **தினமலர்** |
| 612. | 28.2.10 | **மதுரை மாவட்டம்:** மதுரை புதூர் உலகநாதன் தெருவைச் சேர்ந்த சகாயசெல்வி மகள் கிரேசி(12). அதே தெருவைச் சேர்ந்த அருண்குமார்(20) பள்ளிக்கூடம் செல்லும் போது கிரேசியை கேலி, கிண்டல் செய்ததாக சகாயமேரி புகார். | ஈவ்டீசிங் | தினத்தந்தி |
| 613. | 28.2.10 | **மதுரை மாவட்டம்:** மதுரை உசிலம்பட்டி அருகே உள்ள நல்லுத்தேவன்பட்டியைச் சேர்ந்த சின்னக்கொடி மனைவி தமிழ்ச்செல்வி. கணவன் மனைவி குடும்ப தகராறில் மனமுடைந்த தமிழ்ச்செல்வி விஷம் குடித்துத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 614. | 28.2.10 | **மதுரை மாவட்டம்:** மதுரை கடைகள் மற்றும் நிறுனங்களில் பணியாற்றிய 4 குழந்தை தொழிலாளர்கள் மீட்கப்பட்டனர். | குழந்தைத் தொழிலாளர்கள் மீட்பு | தினத்தந்தி |
| 615. | 28.2.10 | **தருமபுரி மாவட்டம்:** பென்னாகரம் தொகுதி இடைத் தேர்தல் திமுக செயல்வீரர் கூட்ட கறிவிருந்தில் திமுக நகர அவைத்தலைவர் பூவண்ணன் தாழ்த்தப்பட்டவர்களை ஜாதிப்பெயரை சொல்லி இழிவாகப் பேசியதாக புகார். | தலித்துகள் மீதான வன்முறை | ஜனசக்தி |
| 616. | 28.2.10 | **திண்டுக்கல் மாவட்டம்:** வடமதுரை அருகே பாறைப்பட்டி, பெரிய ரெட்டியபட்டி கிராமங்களில் உள்ள கோவில்களையும், அதன் சொத்துக்களையும் ஆக்கிரமித்து மோசடிகளில் ஈடுபட்டவர்களை அம்பலப்படுத்திய வி.தனசேகரன் மீது ரவுடிகள் கொடூரமாக தாக்குதல். இதுகுறித்து புகார் கொடுத்தும் காவல்துறை நடவடிக்கை எடுக்கவில்லை என பொதுமக்கள் புகார். | காவல் நிலைய வன்முறை | தீக்கதிர் |
| 617. | 28.2.10 | **விருதுநகர் மாவட்டம்:** வத்திராயிருப்பு அருகே உள்ள ராமசாமியாபுரத்தை அடுத்துள்ள பட்டுப்பூச்சி நகரைச் சேர்ந்த ஆனந்த ஜோதி(19). ஜப்பான் இருவரும் காதலித்தனர். திருமணம் செய்வதாக ஆசை | பெண்கள் மீதான வன்முறை | தமிழ்சுடர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வார்த்தை கூறி ஜப்பான் ஏமாற்றியதாக ஆனந்தஜோதி புகார். | | |
| 618. | 28.2.10 | **மதுரை மாவட்டம்:** சமயநல்லூர் போலீஸ் சரகம் அலங்காநல்லூர் பகுதியைச் சேர்ந்த மணிவாசக்பெருமாள்(27) மனைவி தர்மேஸ்வரி(23). கூடுதல் வரதட்சணைக் கேட்டு கணவர் மற்றும் குடும்பத்தார் துன்புறுத்தியதாக தர்மேஸ்வரி புகார். | பெண்கள் மீதான வன்முறை | தமிழ்சுடர் |
| 619. | 28.2.10 | **மதுரை மாவட்டம்:** மதுரை மேலூர் போலீஸ் சரகம் பெருங்காலக்குடி பகுதியைச் சேர்ந்த ரவிச்சந்திரன் மனைவி தனலட்சுமி(26). ரவிச்சந்திரன் மனைவி நடத்தையில் சந்தேகப்பட்டு தனலெட்சுமியை தாக்கியதில் தனலெட்சுமிக்கு காயம். | பெண்கள் மீதான வன்முறை | தமிழ்சுடர் |
| 620. | 28.2.10 | **கடலூர் மாவட்டம்:** கடலூர் சாவடி அருகே உள்ள தனலட்சுமி நகரைச் சேர்ந்த சிவானந்தம்(50) கடலூர் புறநகர் காவல்நிலையத்தில் தலைமைக் காவலராக பணியாற்றி வந்தார். உடன் வேலை செய்த காவலர்கள் தரக்குறைவாக பேசியதால் சிவானந்தம் தற்கொலை. | காவல் நிலைய வன்முறை | தமிழ்சுடர் |

மக்கள் கண்காணிப்பகம்